**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 594/2019**
**நாள் 04/02/2026 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜஸ்வந்த் குமார் (PW1) | த/பெயர் – |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். மனுதாரர்தரப்பு சான்றாவணங்கள் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது.

1. (1). முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா ஆ 1** ஆகவும்,

(2). விபத்து பதிவேடு **ம.சா ஆ 2** ஆகவும்,

(3). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் **ம.சா ஆ 3** ஆகவும்,

(4). 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று நகல் **ம.சா ஆ 4** ஆகவும்,

(5). மருத்துவ விடுவிப்பு அறிக்கை அசல் **ம.சா ஆ 5** ஆகவும்,

(6). கதிரியக்கபடம் **ம.சா ஆ 6** ஆகவும்,

(7). புகைப்படம் **ம. சா ஆ 7** ஆகவும்,

(8). மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஒளிநகல் **ம.சா ஆ 8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. விபத்து சமயத்தில் எனக்கு என்ன வயது என்றால் 14 வயது, 8 ம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தேன். தற்போது டிப்ளமோ 2ம் வருடம் படித்து வருகிறேன். விபத்து எந்த தேதியில் எங்கு நடந்தது என்றால் 13.05.2019ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் சோழவரம் பெட்ரோல் பங்க் அருகே நடந்தது. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்றுக்கொண்டிருந்தபோது நான் சென்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டிச்சென்ற காரணத்தினால் முன்னால் சென்றுக்கொண்டிருந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி முன்னால் சென்றுக்கொண்டிருந்த காரின் மீது விழுந்து விபத்து ஏற்பட்டது.

2. விபத்து சம்மந்தமாக யார் புகார் கொடுத்தது என்றால் நாங்கள் இடித்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் கொடுத்தார். 2 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உாிமம் இருந்ததா என்றால் இருந்தது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றவரின் பெயர் மற்றும் வயது என்ன என்றால் அவர் பெயர் மணிகண்டன், அவருக்கு அப்போது 18 வயதுக்கு மேல் இருக்கும்.

3. மேற்படி மணிகண்டனுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உாிமம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் இறுதி அறிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் நாங்கள் சென்ற வாகனம் தவிர மேலும் இரு வாகனங்கள் ஈடுபட்டிருப்பதால் அந்த வாகனங்களின் உாிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களை மனுவின் தரப்பினராக சேர்த்திருக்க

வேண்டும் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் தான் ஏற்ப்பட்டது என்றால் சரிதான். அவர் தான் அதிவேகமாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினார். விபத்து சமயத்தில் அவருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லை என்றும் அது காப்பீட்டு விதிகளுக்கு முரனானது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**